சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி:13.11.2025

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | 6/2025 |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-14 |
| சாட்சியின் பெயர் | : | சரவணகுமார் |
| தந்தை பெயர் | : | சம்மந்தம் |
| கிராமம் | : | திருவாரூர் |
| தாலுக்கா | : | திருவாரூர் |
| தொழில் | : | வட்டாட்சியர் |
| வயது | : | 43 |

2025 ம் ஆண்டு நவம்பர் மாதம் 13 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் உதவியாளராக பணிபுரியும் திருமதி. ஆர். அன்பரசி அவர்களால் இந்த சாட்சிக்கு 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

1, 2 எதிரிகள் ஆஜர். அரசு வழக்கறிஞர் மற்றும் எதிரிகள் வழக்கறிஞர் ஆஜராகி உள்ளனர்.

<u>முதல் விசாரணை</u>

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் தற்போது நீடாமங்கலம் வட்டாட்சியர் அலுவலகத்தில் வட்டாட்சியராக பணிபுரிந்து

வருகிறேன். இதற்கு முன்பாக நான் குடவாசல் வட்டாட்சியர் அலுவலகத்தில் மண்டல துணை வட்டாட்சியராக பணியிலிருந்தபோது கடந்த 13.10.2022 ஆம் தேதி குடவாசல் உட்கோட்ட காவல் துணை காண்காணிப்பாளர் அவர்கள் கொடுத்த வேண்டுகோள் கடித்தின் அடிப்படையில் புதுக்குடி கிராமத்தை சேர்ந்த மணி மகன் 1ம் எதிரி சசிகுமார் என்பவரும் மற்றும் மணி மகன் 2ம் எதிரி சரவணன் ஆகிய இருவரும் இந்து அகமுடையார் என சாதி சான்றிதழ்கள் வழங்கினேன். 1 மற்றும் 2 எதிரிகளுக்குரிய சாதி சான்றிதழ்கள் முறையே **அ.சா.ஆ-9 மற்றும் 10** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்மந்தமாக காவல் துணை கண்காணிப்பாளர் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>: இல்லை.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2025.11.13 17:42:34 +0530

அமர்வு நீதிபதி,

எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு

நீதிமன்றம், திருவாரூர்.